



ஓலை 159| ஓசை 282| பிப்ரவரி 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## சாமி சிதம்பரனார்

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அற்றார் அழிபசி தீர்த்தல் அ:தொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி

## பொருள்

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப் பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

விருந்தில் லோர்க்கில்லை பொருந்திய ஒழுக்கம்!

பாவகை : நான்கடித் தரவு கொச்சகக் கலிப்பா




மண்ணிற்கு விருந்தோம்பல் மழைநீரே ஒழுக்கமாகும்;
கண்ணிற்கு விருந்தோம்பல் கண்ணீரே ஒழுக்கமாகும்;
எண்ணத்தின் விருந்தோம்பல் ஈடற்ற ஒழுக்கமாகும்;
உண்ணவைக்கும் விருந்தோம்பல் உலகத்தின் ஒழுக்கமாகும்!

ஒழுக்கமுடை மாந்தர்க்கு உணவீயும் பண்பாகும்.
அழுக்காறு மனத்துடையோர் அவர்செயலை விருந்துனிலே
வழுக்காமல் காண்போமே; வகையாக நாமுணர்ந்தே
ஒழுக்கத்தை விருந்தோம்பல் ஒன்றினிலே அறிவோமே!

நாயேதான் ஆயிடினும் நரியேதான் ஆயிடினும்
பேயேதான் ஆயிடினும் பெரியவரோ சிறியவரோ
தாயேபோல் அன்பாலே தகுந்தவாறு போற்றியேதான்
வாயேதான் வயிறுந்தான் வாழ்த்திடவே விருந்தளிப்போம்!




விருந்தோம்பல் என்பதுவோ விண்ணுயர்ந்த பண்பாகும்;
அருந்தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் ஒன்றாகும்.
மருத்துவரும் கடைபிடிக்கும் மாண்புமிகு செயலாகும்.
அருகிடாத விருந்தோம்பல் அகிலமெல்லாம் நிலைக்கட்டும்!

**இலக்கணக் குறிப்பு:**

கலிப்பா வகைகளில் தரவு கொச்சகக் கலிப்பா ஒருவகை. இதில் நான்கடி கொச்சகம், ஐந்தடி கொச்சகம், எட்டடிக் கொச்சகம் உண்டு, ஒவ்வொரு அடியிலும் நிரையசைக் கொண்டு தொடங்கல் வேண்டும். ஆனால், இயலாது என்பதால் நேரசைக் கொண்டும் பெரும்பான்மையாகக் பெற்றும், சிறுபான்மையாக ஈரசைச் சீர்கள் விரவியும், நான்கடி காய்ச்சீர்களைப் என்றால் நான்கடியும், ஐந்தடி யென்றால் ஐந்தடியும், எட்டடி என்றால் எட்டடியும் ஒரேதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வரும். காண்பதற்கு கலி மண்டிலம் போல் இருக்கும். தளை பார்க்கத் தேவையில்லை. திறனுடையோர் வெண்டளை வைத்தும் எழுதலாம்.

# அறத்தை ஒழுகச் சிறக்கும் மனிதம்

பாவகை : குறளந்தாதி

1. அழுக்காறை நாளும் அகற்றியே அன்பைப்
பழுதின்றிச் சேர்த்தலே பண்பு.

2. பண்பால் விலகும் பகைகொளும் எண்ணமே
திண்மையாய்த் தோன்றும் திடம்.

3. திடமே மனதில் தெளிவினை யூட்டி
மடமை அகற்றிடும் மன்.

4. மன்னிய ஆக்கத்தை மாசின்றி ஈந்திட
இன்பமே சூழும் இனி.

5. இனியவைப் பேசினால் இன்னல் அகலும்
நனிபுகழ் மேவும் நயம்.

6. நயமுடன் வாழ நயவரும் சேர்வர்
தயவால் பெருகுமே தண்.

7. தண்மை நிறைந்திடத் தாழ்நிலை நீக்கிடும்
கண்ணோட்டம் வந்திடும் காண்.

8. காண்பதில் எல்லாம் களங்கம் அகற்றியே
மாண்புடன் வாழ்தல் மடம்.

9. மடங்கியே வாழ மயக்கம் விலகும்
அடக்கம் .நிறைக்கும் அருள்.

10. அருளுடன் மக்களை அன்பாய் நடத்த
அருவமாய் நீங்கும் அழுக்கு.



கவிஞர் செ.கலைவாணி

# ஏறு தழுவல்



அலையென்றே பல்லாயிரம் பேர் கூடி ;
அரசாணை மீட்டுதர ஏறு தழுவல் !
குலுங்கிடவே காளைகளின் ஜல்லிக் கட்டு ;
கூடிட்ட காளையர்கள் ஏறு தழுவல் !

உலகத்தோர் வியந்துபார்க்கும் வீர ஆட்டம் ;
ஊசிமுனை துன்பமின்றி எருதும் ஓட்டம் !
கலங்கிடாத நெஞ்சுரத்தார் பாய்ந்து பிடிப்பார் ;
காளைகளைக் கட்டியணைப்பார் சுற்றி வருவார் !

பலப்பலவாய் பரிசுகள் காளைக்கும் உண்டு ;
பாங்குடனே வளர்த்திட்டார் பெருமை கொள்வார் !
சிலபொழுதில் உடல்புண்கள் ; உயிர்க்கும் நலிவு ;
சீர்மரபினர் திறம்கொண்டே தொடர்ந்து நிற்பார் !

சலங்கைகளு டனேவண்ணக் கொம்பில் பணத்தாள் ;
சரிந்திடாமல் வென்றிடுவார் காளை யர்கள் !
கலப்பில்லா இனக்காளை வளர்த்தல் கடனாய்த்
காத்திட்டே வரும்மறவர் என்றும் வாழ்க !

கவிஞர் ஆ. ச. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

உயிராகி ஒளியாகி!
ஓங்கார நிலையாகி
வாடிடும் உயிர்களுக்கு
வாடிய வள்ளலார்!

வறியோரின் கொடும்பசியை
அறவே ஒழித்திடவே
அறச்சாலை தொடங்கியவர்
ஒளியாகி போனாரே!




அன்னமிட்ட கைகளைத்jhd;
அனைத்திட்ட வள்ளலார்.
அனையா அடுப்புதனை
அவர்துவங்க வைத்தாரே!

சன்மார்க்க நெறிதனையே
தன்மார்க்கமாய் மாற்றிவிட்ட
தன்மானம் உள்ளவர்தான்
என்மார்க்கம் வள்ளலாரே!

வாடிய ஜீவனெல்லாமல்
வாடாமல் வைப்பதற்கு
வாடினாரே வள்ளலாரே
அருட்பெருஞ் சோதிஆனவரே!

கவிஞர் பகலவன் (எ) இரவி சீனுவாசன்

# வேறல்ல கடவுள்



நேர்க்கோட்டின்
உயரத்தை அழிக்காமல்
பக்கத்தில்
பெரிய கோடிழுத்து
கோட்டினைப் பெரிதாக்கும்
கலையைக் கற்றுக்கொண்டது
என் குழந்தையிடம்தான்.

"ஐ" பார்க்க வேண்டுமா?
என ஆவலுடன் கேட்ட
குழந்தைதான்
தன் கண்ணை
"ஐ" யென்று காட்டிப் பரிகசித்தது.

விருந்தினரை
சாப்பிட இலையில்
உட்காரச் சொன்னதற்கு
அவரெதிரில்
என்னைக் கேலிப்பேசி
கோரைப்பாயில்
விருந்தினரை அமர வைத்ததும்
குழந்தைதான்.

எனக்குப் பலூன்
பயத்தைப்போக்கி
பெரிதாய் ஊதக்
கற்றுக் கொடுத்ததும் கூட
அதே குழந்தைதான்.

நம் தவறுகளையும்
அறியாமைகளையும்
கண்டு களைவது
குழந்தைகளெனும் போது
அக்குழந்தைகளை கடவுளெனச்
சொல்வதில் தவறேதுமில்லை.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# காத்திருப்பு சுமை

இதமான காற்று
மிதமான மழை
இவை இரண்டிற்கும்
இடையில் எதற்கு
இந்த காத்திருப்பு
தெரியவில்லையே.

ஒருவேளை காயத்தினை ஆற்ற
அவள் வருவாளோ
தெரியவில்லையே.

கையில் குடை இருந்தும்
வீட்டிற்கு செல்ல வழி தெரிந்தம்
இந்த நள்ளிரவில்
யாருமில்லா சாலையில்
எதையோ யோசித்து கொண்டு
தனியாக நிற்பதற்கு
காரணம் என்ன
தெரியவில்லையே.

காலம் கடக்க கடக்கதான்
காதல் வருமோ
தெரியவில்லையே.

பலநேரம் ஏன் எதற்கு
என்று ஆராய்ந்து பார்க்காமலே
காத்திருக்கிறோம்.



கவிஞர் மா. மோனிஷா

உழவன் உழைப்பினிலே
உலகம் சுழல்கிறதே.
உழும் கலப்பையின்
உன்னதங்கள் தெரிகிறதே.

உலகமே உழைப்பவன்
கையில் தவழ்கிறதே.
உட்கார்ந்து உண்ணும்
மக்களிடையே விழிப்பணர்வே.

வயல் வெளியின்
வண்ணம் புரிகிறதே
வணக்கம் சொல்ல
வலுவாகிறது எண்ணங்களே.

வையகம் சிறக்க
வைகறையிலே எழுகிறான்
வையின் வளத்தை
வையலின் வரைவிலே.

உனக்கும் எனக்கும்
உயர்வுகள் புரிந்திட
உணர்வுகளைப் பூட்டுகிறான்
உழவின் ஏர்களிலே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# ஊடல் உவகை

அதிகாரம் : 133



தவறே இல்லாதிருந்தும்
அவன்காட்டும் பேரன்பு.
தலைவிக்கு ஏனோ
ஊடலை உண்டாக்குதே.

ஊடல் தரும்
சிறுதுன்பம் பின்னாளில்.
காதல் பெருக்கும்
பேரின்பம் தருவதே.

நிலம்சேரும் நீர்போல
காதலனிடம் ஊடலாகுதல்.
மேலுலகின் இன்பத்திலும்
மேலான இன்பமாமே.

என்னவனைத் தழுவியபின்
அவனை விடாதிருக்கச்செய்தலும்.
என்நெஞ்சின் உறுதியை
உடைக்கவல்லதும் ஊடலேயாமே.

தவறில்லா பொழுதும்
ஊடல் மேற்கொண்டு.
தலைவியை பிரிந்திருத்தலும்
ஓர் இன்பமாமே.

உண்பதிலும் முன்னுணவு
செரித்தலே இன்பமாப்போல்.
கூடித்தழுவலினும் ஊடலே
காமத்திற் கின்பமாமே.

ஊடலில் தோல்வியுற்றோர்
வெற்றிபெற்றோரே இஃதை.
கூடலின்பம் அடைகையில்
உண்மையெனக் காண்பரே.

கூடி மகிழ்ந்திருக்கையில்
கண்ட இன்பமதை.
ஊடி இணைகையில்
தேடி அனுபவிக்கவியலுமே.

காதலியவள் இன்னும்
ஊடிடட்டுமே பிணக்கதை.
தீர்க்கவே இந்நாளின்.
இராப்பொழுது நீளட்டுமே.

பிணக்குடன் சண்டையிடல்
காமத்திற் கின்பமாமே.
சண்டையோடே தழுவி
கூடிடல் ஊடலுக்கின்பமாமே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# அகத்தினழகு

இன்றைய நாகரீக உலகில்
மனிதனின் முகங்கள்

முகமூடிகளின் போர்வையில்
போலிகளாய்

அர்தமில்லா புன்னகையில்
மனிதம் ஏமாற்றமாய்

அடுத்தவரின் அந்தரங்கம்
காண மனிதன்

இன்று ஆர்வத்தின்
அவதாரங்களாய் நாள்தோறும்

இன்றைய நாளில்
அகத்தின் அழகு

எல்லாம் அசிங்கத்தின்
குப்பைகளாய் உள்ளத்தில்

பொறாமையின் கரங்களில்
மனிதம் பெங்கலாய்

நல்லவரின் எண்ணிக்கையோ
கிழிபடும் கவலைகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

தமிழா நீயும் பேசிடும் தமிழே
தமிழனே நீவிழி தமிழேதான் வழி
தெள்ளிய மொழியாய் தித்திக்கும் வழியென
அள்ளிய உள்ளமாய் அமுது படைக்குமே

செம்மொழி பிறப்பாய் சிறப்பின் சொல்லாய்
எம்மொழி பிறந்தினும் அனைத்துமே அடுத்ததே
வாழ்வின் துணையாய் வாழ்த்திய உள்ளமாய்
தாழ்வினை நிமிர்த்திடும் தன்னிகரில்லா மொழியே

திரண்ட மனதாய் தித்திக்கும் துளியாய்
கரமாய் காக்கும் கண்ணிய வாழ்விலே
சுமைகள் தீர்த்து சுகமாய் வளர்க்க
இமையாய் காக்கும் இன்பத்தின் அழகே

மொழியை வளர்க்கும் முதன்மைச் செயலாய்
வழியைக் கண்டு வளமும் பெருக்குமே
பிறரது மொழியில் பிரிதொரு நாட்டத்தை
நிறமாய்க் குறைத்து நிம்மதியில் நிலைப்போமே

சொந்தத்தின் உயர்வில் சொர்க்கமாய் கடந்து
பந்தமாய் நிலைக்கும் பகுத்துணர்வு வரமே
தீர்த்தக் கரையினிலே தித்தித்த தேனாய்
வார்த்த வார்த்தையாய் வசந்தம் கொடுக்குமே

சிந்தைப் பெருக்கி சிறப்புற மகிழ்ந்து
வந்தனை செய்யும் வாழ்வில் என்றுமே
எதிர்காலம் என்றும் எழுத்தாய் நிரப்பி
கதிரோன் ஒளியோடே கடமையில் காக்குமே





**கவிஞர் பி. அன்பழகன், கடலூர்**

# கலியுகம்



கறைபடிந்த அவன் ஆடை
கலப்படமில்லா அவன் இதயம்
அழுக்கான அவன் மேனி
ஆங்காங்கே அவனை அருவருக்கும் மனிதர்

தேடினேன் அவனது உள்ளத்தினை
உருகிவிட்டேன் நானும் அன்று
அவனில் நான் பார்த்தது
வார்த்தையில் இன்று சொல்ல முடியாது

அவனில் இருந்த மனிதாபிமானம்
மறைகளில் போதிக்கப்படும்
நிகழ்வுகள் நிஜமானது போல
வியந்தபடியே நான்
அவனின் விலாசம் தேடுகின்றேன்

கலியுகத்தில் இப்படியுமா?
கேள்வி கேட்டபடி அவன் அருகே
ஒயிலாக வாழும் உலகில்
ஆசைகளை அடக்கி
போதனைகளை வாழ்வில் ஓட்டுகிறான்

கலியுகம்
காசுக்கு விற்க வாங்க
வியாபாரம் செய்கிறதோ?
உறவுகள் அழிக்கப்பட்டு
உல்லாசம் காண
போதையில் மிதக்கிறதோ?

எல்லாம் போலி
உண்மையை காண்பது
நீயா? நானா?
அழிவுக்கு காலம் தெரியாது
களியாட்டம் கொடுத்து நிற்கும்
வலியின் ரணத்தை
கழிக்கட்டும் அவன் பாவ இருளை

கவிஞர் திருமதி. ஜுவனிற்றா கிங்ஸ்லி

# அந்த மழை நாளில்



அந்த மழை நாளில்
மனம் தொட்டு சென்றவன்
யாரோ அவன்

இருளும் இடியும்
சத்தமிட்டு பேசியதில்
உள்ளுக்குள் உதறிய
உதறல் மொழியில்

நடுக்கம் நயமாக
ஒட்டிக் கொண்டது
உருண்டோடிய துளிகள்
எல்லாம் அடுத்து என்னவென்றது

விழுந்த நீரும் விலகிய
குளிரும் சற்றே வெப்பசலனத்தில்
இருளின் ருசியில்
முகமதறியாது போன மாயம்

எங்கிருந்தோ வந்து
என்னை எதிலிருந்து காத்திடவோ
வந்தானோ அவன்

ஆமாம் சிலிர்த்துதான்
போகுது தேகம் மொத்தமும்
நகர்த்தியது எவ்விதம் என்று
அறியாமலே என் கையில்
அவனின் குடையிருக்கே

அதிர்ந்து அலைபாய்ந்த
மனதின் பெரும் ஓசையில்
தேடல் தொடர்கிறது
மாயவன் மறைந்தான்

மழை கரைந்ததும் மனம்
கரையாது
மனதோடு பேசவா என்ற
மனதை என்ன செய்வது
மறைந்திருந்து வந்தாயோ
அம்மழைநாளில் நீ

இது காதலென்றால்
இருந்துவிட்டு போகட்டுமே
நரைத் தட்டுவதற்குள் வருவாயோ
என் பிதற்றல் மொழிக்கு
விடை தருவாயோ

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# கண்ணோடு பேசவா காதலா



கருவிழிக்குள் உன்னை
வைத்தேன் நானே
இமை மூடாமல்
தினமும் காக்கிறேன்

இதயத்தில் நுழைந்து
இனிமை தருபவனே
இதழ்களில் சுவையூற்றி
முத்தம் கொடுப்பவனே

காணும் காட்சிகளில்
எல்லாம் நீதானே
பனித்துளியாய் கரைகிறேன்
உந்தன் நினைவுகளாலே

ஆருயிரில் கலந்திட்ட
உணர்வே விலகாதே
அன்பானவனே கனவுகளில்
நிதமும் வந்திடு

ஏக்கத்தில் தூக்கத்தை
தொலைத்த இரவுகளே
அதிகாலை அரவணைப்பில்
ஆனந்தம் உண்டாகுதே

கண்ணோடு பேச வா காதலா
உறவாகி வந்திடுவாயே
உரிமை கொண்டாடவே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

நிறமற்ற
காற்றுக்கு

நிறமூட்டி
செல்கிறது
வெண்பனி.

பனியின்
பணியில்

மனம் குளிர்ந்து
மகிழ்கிறது
காற்று.



கவிஞர் அ. சேவியர்


ஒவ்வொரு எழுத்திலும்
ஒவ்வொரு வார்த்தையிலும்
ஒவ்வொரு இடைவெளியிலும்
ஒவ்வொரு கோட்டிலும்
மூச்சாகவே நீயிருக்கிறாய்.

என் கவிதை
எனப்படுவது
சொற்களல்ல கண்மணி.



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

அல்லவை தேய அகம் மிளிரும்
ஆன்றோன் ஆக்கம் பெருக
அல்வழி அற்றுப் போகும்.
ஆக்கம் செம்மை நிறைமதி சூழ
ஆல்போல் செழிக்கும் இல்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# ஒரு பாலை பூக்கிறது

மறுதலிப்பு ஒன்றை மட்டும்
மலராய்ச் சூடிக்கொண்டு
நடப்பதை எல்லாம் கனவாக நினைக்கும்
ஞாபக மறதி உனக்கு!

இருப்பே தெரியாத
இருளின் முகவரியைத் தேடும்
அலாதிப் பிரியம் வாய்க்கும்போது
எப்படித் எந்தன் ஞாபக நதி தீண்டும்?

வரமாய் வந்த
நினைவுகள் அத்தனையும்
வாடிக்கையாய் நிகழும்
வழிப்பயணச் சுவடாய் மறந்துபோகையில்
வாழ்வின் முதல் கனவு
நீளாத் துயிலில் நீந்துகிறது!

எதுவரை நீளுமென்ற
எதிர்பார்ப்பு என்னைத் தொட்டு
இடம்வலம் போகையில்
மருதோன்றிப் பூவாய்
உன் புன்னகை தொட்டதும் பூக்கிறது
மனமென்னும் வறண்ட பாலை!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# செம்மொழியே!

தேனினும் இனிய
நற்சுவையே
செந்தேன் மொழியே!

ழகரம் அழகே,
சிகரம் தாண்டிய புகழே!
சங்க நூலோடு
சங்கம் வளர்த்த பெருமிதமே!

தென் தமிழே,
தொன் மொழியே!
குமரியில் பிறந்தவளே!

சிலம்பும் மணியும்
இயம்ப
இரட்டைக் காப்பியம்
கொடுத்தவளே!

ஐந்திணையில்
இயற்கை விதைத்த
எம் தமிழே!

அகம் நீயே, புறமும் நீயே,
உலகம் போற்றும்
பொதுமறையே!

எட்டாக, பத்தாக,
பதினெண் இலக்கியம்
சொன்னாயே!

செம்மொழியாய்,
செந்தமிழாய்,
புதுமை நூறு கண்டும்
பழமை மாறாமல் நின்றாயே!

முக்காலமும்
இசையாய் உரையாடும்
கவிதையே கதையே!

ரௌத்திரம் நீ
சிதம்பர ரகசியம் நீ
கலையின் சித்திரம் நீ!

எதுகையும் மோனையும்
உன் இயைபோ!
பிழை இல்லா முரண் நீயோ!

சொல் சிற்ப ஓவியமே
நீ வார்த்தை
நடனமோ நாட்டியமோ

படிப்பவன் கையும்
பாவலன் கோலாய்
பா பல புனையுதே!

சந்தம் எண்ணிலா
கொண்ட செம்மொழியே!
எம் தாய் தமிழ் மொழியே!



கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

வேலியில்
பூத்துக் குலுங்கும்
புன்னகை மலரவள்.

வாசமில்லா
மலரின்
நேசத்தை
பூட்டி கொள்ளும்
புன்னகை பூ அவள்.

அவளின் புன்னகை
அவளின் வெற்றி பாதை.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

திகட்ட திகட்ட திட்டிவிட்டு
திருந்தி என்ன ஆகப்போகிறது?
தேளாய் வார்த்தைகளை கொட்டிவிட்டு
தேம்பி அழுவது என்ன பலன்?
ஆத்மாவில் படிந்துள்ள
கோபத்தை அன்பால்சலவை செய்
பாசத்தால் ஒரு இனிப்பின் கலவை செய்
இன்சொல் திறவுகோலால்
முரண்பட்ட இதயங்களின்
கதவுகளை திற
நீ சார்ந்த சமுகம் சேமம் பெற
சேர்த்த செல்வத்தை ஈகை மூலம் தந்திடு
தயங்காமல் பாம்பிற்கும் பால் மழை வழங்கிடு
பாலின் ருசியை பற்றி
பாம்பிற்கு பாடம் நடத்த அல்ல
நேசிப்பில் உயர்திணை அஃறிணை
உனக்கு இல்லை என்ற பண்பை உணர்த்த
வளைந்து கொடுத்து அன்பால் இழைந்து கொடுத்து
வாழ்க்கையை நேராக்கு சந்தோசத்தை கூராக்கு
சமத்துவத்தை சீராக்கு; நம்பிக்கை வயலில்
துன்பக்களை முளைப்பதில்லை
உண்மையை உரைப்பவன்
உலகில் குறைந்தவன் இல்லை.
புகைப்பிடிப்பதும் பிறர்மேல் பகை பிடிப்பதும்
சாபக்கேடு
அன்பை அன்பால் சொல்லு; அகிலம் வெல்லு



கவிஞர் முனைவர் முனியாண்டி, திருவில்லிபுத்தூர்

# போய் வரவா

அதிகாரம் இங்கு
ஓங்கி இருக்கு
அன்பெனக்கு இங்கு
வேலை இல்லை
போய் வரவா?

அடாவடியும் அடிதடியும்
அதிகமாக இருக்கு
அகிம்சை எனக்கு
வேலை இல்லை
போய் வரவா?

பொய்யும் புரட்டும்
போலியும் நடமாடுது
உண்மை எனக்கு
வேலை இல்லை
போய் வரவா?

நிதிகளால் வாங்கப்படும்
நீதியே இங்கிருக்கு
உண்மையான நீதி
எனக்கு வேலையில்லை
போய் வரவா?

பணநாயகம் ஓங்கி
தாண்டவம் ஆடுது இங்கே
சனநாயகம் எனக்கு
வேலை இல்லை
போய் வரவா?



மதங்களின் வெறியாட்டம்
சாதிகளின் சதிராட்டம்
இயல்பாய் இருக்கு
சமத்துவம் எனக்கு
வேலை இல்லை
போய் வரவா?

மனிதனை மனிதனாய்
மதிக்காத தன்மை
பரவலாய் இருக்கு
மனிதனாய் வாழ
இங்கு விருப்பமில்லை
புதியதோர் உலகிற்கு
போய் வரவா?

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# பசி

கொஞ்சம் அரிசியும்,
கொஞ்சம் தண்ணீரும்
வைத்திருந்ததை
புறாக்கள் கொறிக்கும்போது,
இது குருவிகளுக்கானது
என்கிறீ ர்கள்
ஏன் ?
என்று கேட்டால்
புறாக்கள் வெகு தூரம்
பறந்துச் சென்று
இரை தேடும் என்றும்
விரைவாக கொறிக்கும்
திறன் கொண்டது என்றும்
குருவிகள் அப்படியல்ல
ஒரு சில மணிகளைக்
கொறித்து பின் பறந்து
சென்று விடும்
அதனால் வெகு தூரம்
பறந்துச் சென்று
இரை தேட முடியாது
எங்கிறீர்கள்
நான் கேட்கிறேன்
பசி பொதுவானதே
மட்டுமல்ல
குருவி, புறா என்றல்ல
என்றுப் பறவைக்கென்று
இரை வைக்கப் போகிறீர்கள்?




கவிஞர் இரா. மதிராஜ், அலப்பட்சாக் கவுண்டன் புதூர்

எல்லாம்
இயல்பாகவே
இருக்கிறது என்னைப்போல்.

எல்லாம்
கற்பிதமாகவும்
இருக்கிறது என்னைப்போல்.

எல்லாம்
எல்னைப்போல
நான் எல்லாம் போல.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)



**01.** காற்று வீசுவதைக்
காட்டிக் கொடுக்கிறது
அசையும் இலைகள்

**02.** எழுத்துக்களைத்
தாங்கிப் பிடிக்கிறது
காகிதம்

**03.** பட்டாம்பூச்சி
பறக்க மறுக்கிறது
சுவரில் ஓவியம்

**04.** பனித்துளிகளை
விழுங்கிக் கொள்கிறது
சூரியக் கதிர்கள்

**05.** நீண்டு வளரும் மரத்தை
தாங்கிப் பிடிக்கிறது
நிலம்

**06.** வெறுமையை
அள்ளித் தருகிறது
தனிமை

**07.** ஏழை வீட்டில்
நிறைந்து கிடக்கிறது
வறுமை

**08.** காய்ந்த இலைகளை
உயிர்ப்பிக்கிறது
வீசும் காற்று

**09.** பக்கத்து வீட்டுச் சமையல்
காற்றில் வருகிறது
வாசனை

**10.** வெற்றுக் கிளைகளுக்கு
அழகைக் கொடுக்கிறது
படர்ந்த கொடி

கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று (இலங்கை)

# குற்றாலம்

சீமை சீமையென்று எதையெதையோ சொல்கின்றீர்;
சீமை என்றாலது நெல்லைசீமை தானுங்கவந்த
நெல்லைக்குச்சிறப் புவிருட்டுக்கடை அல்வாயென்கிறீர்,
நெல்லையப்பர் அல்லவா நெல்லையின் சிறப்பு!

நெல்லை மாவட்டம்பற்பல சிறப்புகளைப் பெற்றிருந்தாலும்
நாட்டினிலே நல்லதொரு பேருண்டதற்குக் காரணம்
குற்றால மலையில் இருந்து வீழ்கின்ற
குணம்மிக கொண்ட முதன்மையருவி ஐந்தருவி
பழையவருவி புலியருவி இன்னும்பல அருவிகளுமே!

பொதியமலை என்றொரு பெயரும் பெற்றவிந்தமலை
பண்டைய இலக்கியங்களால் திரிகூடமலை என்ற பெயராலும்
அழைக்கப்படுதலை அறிவோம் தமிழர் யாவரும்;
அம்மலைசார்ந்து திருக்குற்றாலக் குறவஞ்சியென்ற நற்றமிழ்
இலக்கியமும் உண்டதனை எழுதிய கவிஞரோ
திரிகூட ராசப்ப கவிராயராவா ரன்னவரை
திருமலைக் குமரனாம் யானும்போற்றி மகிழ்வனே!

குற்றாலமென்பது அருவிக்கு மட்டுமின்றி அங்கெழுந்து
குறைவற்ற வரங்களையருளும் குற்றால நாதருக்கும்
உரியதாய் அமைந்திருப்பதை உலகோர் அறிகவே!
உமையொருபாகன் அங்கு சித்திரசபையில் நடனமாடுவானே!
திருக்குற்றாலத் திலுறையிறையை மாணிக்கவாசகர் சம்பந்தர்
அருந்தமிழில் பாடி மகிழ்ந்து மகிழ்வித்தனரே!

மாணிக்கவாசகர் உற்றாரை ஊரை பேரை
வேண்டேனென உரைத்து கற்றாரையும் மறுத்து
குற்றாலத்து ஈசன்திருவடி மட்டும்போது மென்பதுநாமும்
அறுத்துவிடவேண்டும் அலைகளாயெழுந்திடும் எண்ணற்ற ஆசைகளையென
அருமைமிகு செய்தியை எடுத்துச் கூறுகிறதே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# இருளில் பூத்த மலர்

விடியும் விடியலில்
நான் இல்லை
விடிந்த பொழுதினிலே
என் கண் இல்லை
மார்போடு மதியோடு மறுவிட
தந்தையும் இல்லை
அரவணைக்க தாயும் இல்லை
மனதோடு கலந்திட்ட
தாரம் இல்லை
விந்தில் முந்திய
மக்களும் இல்லை
சூடாமணியாய் சுற்றமும் இல்லை
துவளாத தோழனாய்
நண்பனும் இல்லை
வாட்டத்தின் போக்கை
வானமும் அறியாது
ஓட்டத்தின் வேட்கையை
காற்றுக்கும் புரியாது
இறுதியின்பயணம்
இறப்புக்கும் தெரியாது
இறந்திடவா பிறந்தோம்
இயற்கையின் வாசத்தில்
மறுபிறவியில் துறந்தும்
முப்பிறவி நினைவை



கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

எந்த உருவத்தையும்
பதித்துக் கொள்ளாமல் இருக்கின்றேன்.
கண்ணாடியை போலவே
அதனால் என்னவோ
எல்லா அழகையும் ரசித்தவளாக
இருக்க முடிகின்றது.

எனக்குள் இருப்பதெல்லாம்
பேசிவிடாமல் இருக்கின்றேன்
வீணையைப் போலவே
அதனால் என்னவோ
மீண்டும் மீண்டும்
மீட்டப்படுகின்றேன்.

யாரையும் புரிந்து கொள்ள
முடியாதவளாக இருக்கின்றேன்.
கனவை போலவே
அதனால என்னவோ
எல்லாரும் என்னை
ஏமாற்றி விடுகின்றார்கள்.

நான் எதையும் ஆசைப்படுவதில்லை.
அவற்றை அடைய முடியாது போவதால்
அதனால் என்னவோ
நான் எப்போதும் மாறாமல்
ஒரு நிலையாக இதயத்தை
வைத்திருக்க முடிகிறது.



கவிஞர் ஏ எம். முர்ஷிதா, அக்குறனை (இலங்கை)

எந்த ஒரு துன்பத்திற்கும்
ஒரு விடிவு உண்டு
எந்த முயற்சிக்கும்
ஒரு பலன் உண்டு

எந்த சூழ்நிலையிலும்
தளராத மனமே
நிகழ்காலத்திலும்,
எதிர்காலத்திலும்
சாதிக்கும் துணிவும்
வந்திடுமே!

விடிவு என்பது
திட நம்பிக்கையை தந்து
செயல்பட்டும்
வெற்றியை தந்திடும்
ஒன்றே !


அதிக நோயில் அவதிப்பட்டு
உயிர் பிரிதலும் ஒரு விடிவே!
வேலை பளுவில்
தற்காலிக தூக்கமும்
ஒரு விடிவே!

பிரச்சினைகளுக்கு
தியானம் ஒரு விடிவே!
விடிதலும், முடிதலும் நம்மிடமே!



கவிஞர் கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை


எதையாவது ஒன்றை
சுமந்துதான்
ஆகவேண்டுமென்றால்
ஒரு நாளைக்கு
ஒரு முறையாவது
உங்கள்
புன்னகையை
சுமந்து கொள்ளுங்கள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# தமிழன் யார்?

பெயர் தமிழன் என எழுதிக்கொண்டு
உலகம் சுற்றுவது பெருமை அல்ல ,
அடையாளம் சுமந்து நிற்பதே உண்மையான உயரம்.
//
மொழி விற்பனைப் பொருளாக மாறிய நாளே,
சிந்தனை அடிமைத்தனத்தைத் தேர்ந்தது.
//
தமிழைப் பேசுகிறோம் என்று சொல்வோர் பலர்,
தமிழின் கருத்தை வாழ்வில் மறக்கிறார்கள்.
//
மேடை முழக்கம் அடையாளம் அல்ல,
அன்றாட நடைமுறையே அடையாளம்.
//
உடை மாற்றினால் முன்னேற்றம் என்று நம்பி,
எண்ணம் மாற்ற மறுப்பது பின்னடைவு.
//
தமிழர் பண்பாடு அலங்காரம் அல்ல,
அது சமூக ஒழுக்கத்தின் முதுகெலும்பு.
//
பழமை இழிவென்று சொல்லும் நாவுகள்,
மேற்கோள் வாழ்வை பெருமை பேசுகின்றன.
//
சிந்தனை அடிமைப்பட்டால்,
சுயமரியாதை தானாகவே சிதையும்.
//
வரலாறு அறியாத சமூகம்,
எதிர்காலம் எழுத தகுதியிழக்கும்.
//
மொழி காத்தல் உணர்ச்சி அல்ல,
அது சமூக நீதி.
//
தமிழன் தன்னை அறிந்த நாளே,
அடையாளம் கேள்விக்குறியாய் இருக்காது.




கவிஞர் சுகுணா ஆறுமுகம், மலேசியா

# நேசம் கொண்ட பாசம்

கடமையும் அன்பும் கண்களாய் போற்றும்
குணம் மட்டும் இருந்திட்டால்
மாறாத அன்பு மலை போல உயருமே.

நடுநிலைப் பார்வையும்
உண்மையென்ற ஒரு நிலையும்
நேர்மை கொண்ட லட்சியமும்
உன்னை காக்கும் கவசமே.

காட்டையே அழித்திடும்
சிறு தீப்பொறி போலவே
ஆழ்மனதின் துவேஷத்தால்
கருணை அன்பு நேசமெல்லாம்
காணாமல் போகுமே.

உழைப்பாளே உயர்வு வரும்
அன்பாலே நட்பு வரும்
நேசம் என்னும் பாசம் கொண்டால்
அத்தனையும் உறவாய்
உன்னைத் தேடி வந்திடுமே.

மாசில்லா அன்பும்
கருணை கொண்ட இதயமும்
உண்மையான வாழ்வியலும்
உன் வாழ்வை ஒருநாள்
ஏற்றி வைக்கும் உச்சத்தில்.



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

தோள் மீது சாயும் நட்பு
தோழமையாய் திகழும் அன்பு
தொடரும் கனவுகளின் ஓவியம்
மனதை நிறைக்கும் இசை
தொட்டு செல்லும் சாரல் - இதில்
இனிதாய் தொடரும்
நம் வாழ்வின் பந்தம்.

காற்றின் இசை
மலரின் நறுமணம்
மரங்கள் பேசும் மொழி
பறவைகள் பாடும் ராகம்
அழிவிலா அன்பை தரும் நீ.
இந்த இனிய பிரபஞ்சமே
இயற்கை.

தேநீரின் சுவையில் கூட
உன் நெருக்கம் உணர்கிறேன்
திசை தோறும் காற்றின் இசையில்
இன்ப நினைவுகள் மலர
உன்னுடன் பயணம் தொடர
வாழ்க்கை இனிதாகிறது.

இயற்கையை நேசி
அதுவே வாழ்வின் மூச்சு.



கவிஞர் ந. கவிதா, கருங்கல்பாளையம் (ஈரோடு)

மங்கை சிந்திய
குருதி தீட்டு என்றால்
அந்த மங்கை குருதி
கறையின் வழியே
பிறந்தவர்கள் தானே
நீயும் நானும்
அப்படி இருக்கையில்
நாம் எப்படி
தூய்மையானோம்
அயோக்கியர்களின்
அடக்குமுறை



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# நானும் நீயும்

மங்கை சிந்திய
குருதி தீட்டு என்றால்
அந்த மங்கை குருதி
கறையின் வழியே
பிறந்தநான்
பூக்களை
கேட்கின்றேன்
நீ
முட்களை
தருகின்றாய்.

நான்
அன்பினை
யாசித்தேன்
நீ
அம்புகள்
எய்கின்றாய்.

நான்
புன்னகை
செய்கின்றேன்
நீ
கண்ணீர்
சொரிகின்றாய்.

நான்
பாசம்
வைத்தேன்
நீ
வேஷம்
என்கின்றாய்.

நான்
நிலவினை
ரசிக்கின்றேன்
நீ
சன்னலை
சாத்துகின்றாய்.

நான்
விடை
கேட்கின்றேன்
நீ
வினாக்கள்
தொடுக்கின்றாய்.

நான்
தூக்கம் மறந்து
நின்றேன்
நீ
துக்கத்தை தந்து
சென்றாய்.

நான்
விடியலை
எதிர்பார்த்தேன்
நீ
அஸ்தமனம்
ஆகிவிட்டாய்.
வர்கள் தானே
நீயும் நானும்
அப்படி இருக்கையில்
நாம் எப்படி
தூய்மையானோம்
அயோக்கியர்களின்
அடக்குமுறை



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த (இலங்கை)

# நிறம்

ஏழு வண்ணங்கள் இணைந்ததால்தான்
எழில்மிகு வானவில்லும் தோன்றுதே!

பல வண்ணங்கள் இணைந்தே
ஓவியமும் அழகாய் மாறுதிங்கே!

அகமதில் தூய்மையான
வெள்ளை நிறமதில் வீற்றிருக்க

புறத்திலே நிறம் கொண்டு
பாகுபாடு பார்ப்பதும் தான் ஏனோ

விழியில்லா மனிதருக்கு
நிறமிருந்துதான் என்ன பயனோ

நிறமென்னும் புற அழகை
விழிகளினால் தேடி

அகமென்னும் உள்ள அன்பான அழகை
தொலைத்து விடாதே



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி



சில்லென்ற குளிர்காற்றில்
தேகம் தழுவுதே
புல்வெளிகளில் துளிகள்
பூரித்து மகிழுதே

அதிகாலைப் பனியும்
ஆயிலை நினைவும்
மதியோடு கலந்து
பேரின்பம் ஊட்டுதே

எண்ணங்கள் யாவிலும்
ஏழிசை மீட்டுதே
இயற்கையின் அழகில்
இன்பமும் பாயுதே

விடியலில் தீண்டும்
மோகமும் சுகமாகத் தூண்டுதே
பறவைகளின் சத்தமும்
சங்கீதம் இசைக்குதே

உள்ளத்தில் உணர்வுகள்
உருகி உரமிடுகிறதே
கள்ளூறும் போதையில்
காதலைத் தேடுதே

இலைகளில் வழிந்தோடும்
பனித்து துளிகளே
கலையோடு யாசிக்க
என்னை உயிரூடுதே

கவிஞர் கிருஷ் அபி

# என்ன செய்வது?

அவளுக்காக விண்மீன் பிடிக்க சென்றேன்
அவள் கண் முன்னே என்னால்
பிரகாசிக்க முடியாது என்று பின் வாங்கியது.

மலர்கள் பறிக்க சென்றேன்
அவள் கூந்தல் என்னிடம் சண்டையிடும் என்றது.

கம்மல் வாங்க சென்றேன்
அவள் கன்னத்தில் முத்தமிட்டால் எனக்கு
தூக்கு தண்டனை உறுதி என்றது.

புடவை வாங்க சென்றேன்
அவள் மேனியை உரசினால் என்னை
துவைத்து கிழித்து விடுவாள் என்று மறுத்தது.

வளையல் வாங்க சென்றேன்
வலையலோ அவள் இரு கைகளை அழுத்தி பிடிக்க
தைரியம் இல்லை என்று பின் வாங்கியது.

கொலுசு வாங்க சென்றேன்
நான் சத்தமிட்டால்
தேவதையை காட்டி கொடுத்து விடுவேன்
என்று காலை வாரியது.

குங்கும பொட்டு வாங்க சென்றேன்
அவள் நெற்றியின் நடுவில் ஒட்டிக் கொண்டால்
இரு புருவமும் என்னை அழித்து விடும் என்று
என்னை துரத்தியது.

என்ன செய்வது அவளுக்காக
எதுவும் வாங்க முடியாமல்
நூல் அறுந்த பட்டம் போல்
என் மனம் காற்றில் அல்லாடியது.




கவிஞர் ர. ரமேஷ், திருப்பூர்

பனிமலைகளுக்கு நடுவே
என் பாதம் சில்லிட்டது.

எனக்கு முன்னும் பின்னும்
ஒருவருமில்லை .

யாருமற்ற பெருவெளியில்
இன்பமும் துன்பமுமாக
நான்.

சீடனைப் போல
என் பயணத்தை தொடர்ந்தேன்
முடிவில்
ஞானியாகிவிட்டேன்.



கவிஞர் ச. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# ஆற்றின் அழுகுரல்!

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் நாட்களிலும்
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்! ஆறே
ஊருக்கு அழகென்பர்! மலையில் தோன்றிடினும்
சேருமிடம் கடலாகும்! நாகரிகம் தோன்றியது
நதிக்கரையில் என்றுரைப்பர்! ஆறென்றால் வழியென்பர்!
பயணிக்கும் பாதைகளில் பலனளிக்கும் ஆறுகளே!
இயற்கையின் பெருங்கொடையில் ஆறுகளும் ஒன்றாகும்!
ஆறென்பது நன்னீரின் ஓட்டம்! நிலத்தடி
நீருயர ஆறுகளின் ஊற்றே அடிப்படையாகும்!
நீர்ச்சுழற்சியின் ஒரு கூறாகும் ஆறுகள்!
ஆற்றலின் மூலமாய் அமைந்திடும் ஆறுகள்!
சுற்றுச்சூழல் சீர்கேட்டால் மாறியது மழையளவு!
வறட்சி, பெருமழை, பெருவெள்ளம் இவையன்றி
சேர்ந்திடும் சாயக் கழிவுகள், நெகிழிக் குப்பைகள்
சேர்த்திடுதே சீர்கேட்டை! அழுகிறதே ஆறுகளும்!
நீரோடும் பாதைகளில் ஆக்கிரமிப்பு பெருகிடுதே!
பருவமழை பொய்த்தால் வறண்டிடும் ஆறுகள்!
இருபதுக்கும் மேலான ஆறுகளின் பெயர்கள்
இருந்ததைக் காட்டிடும் சங்க இலக்கியங்கள் !
நீர்ப்பஞ்சம் போக்கிட காத்திடுவோம் ஆறுகளை!
ஊருக்கு அழகு ஆறென்றால் அதனழகை
சீரழித்தல் தகுமா? செவிமடுப்போம் அதன்குரலை!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

## நானே நானா

சாதாரண நிலையில்
எதிர்பாராதவைக்கு
நிதானமும்


தோல்விக்கு
காரண ஆராய்ச்சியும்

வெற்றியில்
அடுத்த கட்ட நகர்வும்

கருத்து மோதலில்
அமைதியான
அழுத்தப் பேச்சும்

ஆசைக்கு
தகுதி ஆய்வும்

முடிவுக்கான
காத்திருத்தலில்
பொறுமை காத்தலும்



வேண்டும் என
எண்ணம் கொண்ட நான்
நிகழும் கணத்தில்
இவை ஒன்றுமே
நடக்காத போது
எழும் கேள்வி
நானே நானா?

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

கலங்கிய உள்ளம்
நடுங்கும் விரல்கள்
கண்ணீரின் குருதிகள்
உணவேற்கா உடல்
மாறிய மனம்
பதையில்லா பயணம்
அவள் பாதச் சுவடுகள்
தொடாத தொடர்கதையாய்

தினம் ஓர் எழுத்து எண்ணம்
நடுங்கும் கைகள்
நாளைய வண்ணங்களாக
வரையறை இல்லாமல்
வாழ்க்கைத் தொடரில்
சொல்லாமல் தொடர்கிறது
அவளின் ஒவ்வாமை.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

நெய்லி ரீமா ஹோட்டல் வந்த போது அங்கே ஒரு போலீஸ் பட்டாளமே காவல் இருந்தது. முதலில் பயந்து போனவள், வரவேற்பில் அமர்ந்திருந்த பெண்ணிடம் "எதற்காக இத்தனை போலிஸ் கூட்டம்?"என்று கேட்டாள்.
ஒ! அதுவா? நீங்களும் உங்களோடு இங்கிலாந்தில் இருந்து வந்தவர்களையும் கொரோனா டெஸ்ட் எடுக்க வைத்து உங்களை தனிமைப் படுத்த போகிறார்களாம்"

"ஓ! அப்படியா?நானும் என்னவோ ஏதோ என்று ப யந்து போனேன்" என்றாள்.

"வேறு எதற்காக பயந்தீர்கள்?" என்று கேட்டாள் வரவேற்பில் அமர்ந்திருந்த பெண்.

"ஒன்றுமில்லை"? என்று முகத்தை துடைத்துக் கொண்டு கூட வந்திருந்தவர்களிடம் விளக்கினாள்.

.".போச்சுடா. இனி 14 நாட்கள் கோரண்டைனா?"என்றவாறு தலையில் கை வைத்தான் ஒருவன்.

"வேறு வழியேயில்லையா?"என்று கேட்டான் இன்னொருவன். "ம்கூம் " என்றவாறு உதட்டைப்பிதுக்கினாள் நெய்லி. காவல் துறையினர் எல்லா வழி முறைகளையும் செய்து விட்டு 14 நாட்களுக்கான விடுதித்தொகையையும் வாங்கிக்கொடுத்து விட்டு "இவர்கள் எங்கும் போகமலிருப்பதை கண்காணிப்பது உங்கள் கடமை"என்று அந்த விடுதியின் மேலாளருக்கு கட்டளையிட்டு விட்டுக் கிளம்பினர்.

"பதினான்கு நாட்கள்" ஆங்கிலத்தில் கிறீச்சிட்டான்" இன்னொருவன், தலையில் கை வைத்து அடித்துக் கொண்டே. "வேறு வழியில்லை " என்றவாறு கையை தூக்கினாள் நெய்லி.

நெய்லி கைப் பேசியை எடுத்து நரேனை அழைத்தாள். நடந்ததையெல்லாம் விவரித்த போது "அப்பா, கொஞ்சம் மூச்சு விட நேரம் கிடைத்திருக்கிறது" என்றான் நரேன் பெருமூச்சு விட்டவாறு.

கவிஞர் இரஜகை நிலவன்

"சும்மா ரிலாக்ஸ் பண்ணுறதை விட்டுட்டு என்ன செய்யணும்னு யோசி. இவனுக சும்மா இருக்க மாட்டானு, வெரட்ட ஆம்பிச்சிருவானுவ"

"சரி. நீ எப்ப ஆஸ்பத்திரிக்கு வருகிறாய்"?

"நரேன் எனக்கும் சேர்த்து தான் "கோரண்டைன்" (தனிமைப்படுத்துதல்) அதைத் தெரிஞ்சுக்கோ" கோபமாகக் கத்தினாள் நெய்லி.
"ஓ. ஸாரிஸாரி"
"உன் ஸாரியெல்லாம் குப்பையிலே தூக்கி போட்டுட்டு மொதல்ல அந்த ஆலகாலச் செடியைக் கொண்டாரப் பாரு"

"நெய்லி. நீயும் கூட என் நிலைய புரிஞ்சுக்கல்ல ... சரி. கவிதா வந்தாளா? எதுவும் போன் வந்ததா? வசந்த் ஏதாச்சும் போன் பண்ணினா?"

"ம்ம்ம்... கவிதா போன் பண்ணினா... இங்கயே அவள் வந்தாள்ணா அவளையுயம் (தனிமைப்படுத்துதல்) கோரண்டைன்" ல 14 நாள் இங்கே உள்ள. வச்சுருவானுவ...அதனால அவள. அங்க ஆஸ்பத்திரிக்குத்தான் வரச்சொல்லியிருக்கேன்" நெய்லி சொல்லி முடிக்கு முன் வாசலில் நிழலாட திரும்பிப்பார்த்த நரேன் "ஆங் கவிதா வந்தாச்சி அப்புறமா பேசறேன்" என்று கைப்பேசியை அணைத்து விட்டு, " வா கவிதா என்னா ...என்ன செய்தி?

வசந்த் போன் பண்ணினா?" என்று கேட்டான்.

அவள் "இல்லை" என்று சொல்லி விட்டு அவன் படுக்கையின் அருகில் பெட்டியை வைத்து விட்டு, "வாஸ் ரூம் எங்க இருக்கு?" என்றாள். அவன், கை காட்ட, " அவள் போய் முகம் கழுவிக்கொண்டு வந்தாள். " ரொம்ப அடியோ?" என்றாள் அவன் கைகளைத் தொட்டுப் பார்த்து.

"ஆமாம். எழும்பி நடக்கக் கூட முடியவில்லை. அது சரி, வசந்திற்கு போன் பண்ணினாயா?அவனுக்கு என்னாச்சு?" என்றான் எழுந்து நொண்டிக்கொண்டே அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்து, அவளையும் இன்னொரு நாற்காலியில் அமரும்படி சைகை காட்டினான்.

கவிஞர் இரஜகை நிலவன்

" நான் கேட்க வேண்டிய கேள்வியை எல்லோரும் என்னிடமே கேட்கிறீர்கள். வசந்த் கூட பேசி நாலு நாளாச்சி. போனை எடுக்க மாட்டெங்கிறார்ணு சொல்லித்தானே மெட்றாசிலிருந்து இங்கே வந்தேன்" அவள் முகத்தை துடைத்துக் கொண்டாள்.

" உன் வருத்தம் புரிகிறது கவிதா. நானும் என்ன செய்ய என்று புரியாமலிருக்கிறேன். என்னாலே நடக்க முடியாத சூழ்நிலை"

" நரேன். உங்கள் நிலை எனக்கு புரிகிறது. ஆனால் வசந்த் நிலமை என்னாச்சி, ஏதாவது தீவிரமா நட்ந்திருக்குமோண்ணி" ஏறக்குறைய அழ ஆரம்பித்தாள்.

'சே சே நீ நெனக்கிற மாதிரி எதுவும் நடந்திருக்காது. எதற்கும் ஒன்று செய்வோம். நான் திரும்பவும் ரமணிக்கு போன் பண்ணுகிறேன். நீ சாவகாசமாக, நாங்கள் தங்கியிருந்த அறைக்குப் போய் பெட்டியை வைத்து விட்டு கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள். சாயங்காலம் ஒரு போலீஸ் கம்ப்ளெய்ண்டும் கொடுத்து விடலாம். எதற்கும் கவலைப் படாதே. சும்மா மனசை போட்டு அலட்டிக்காதே. போ போய் கொஞ்சம் ஓய்வு எடுத்து விட்டு வா.. அப்புறம் பேசலாம்" என்று அறையின் சாவிகளைக் கொடுத்து எவ்வாறு போக வேண்டுமென்று வழியும் சொல்லிக் கொடுத்து, ஒரு ஆட்டோ காரனுக்கு போன் பண்ணினான்.

தொடரும்...

கட்டுரை

சிறப்பு



தமிழறிஞர் சாமி.சிதம்பரனார் அவர்கள் தமிழகத்தில் முதன்முறையாக பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர். தமிழ் மரபில் முதல் கலப்பு மணம் செய்தவர், முதல் விதவை மறுமணம் செய்தவர், முதல் சுயமரியாதை மணம் புரிந்தவர், முதன்முதலாக மேலைநாட்டு உடையில் தமிழ் பயிற்றுவித்த தலைமைத் தமிழாசிரியர் எனப் பல்வேறுபட்ட முதலுக்குச் சொந்தக்காரர் தமிழறிஞர் சாமி.சிதம்பரனார்.

பிறப்பு - படிப்பு

மிகச் சிறந்த தமிழ்த் தொண்டரான சாமி சிதம்பரனார். தஞ்சை மாவட்டம், சிறுகடகம் என்ற ஊரில், சாமிநாத மலையமான் கமலம்மாள் எனும் தம்பதியருக்கு நன்மகனாக 1-12-1900ல் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் சிதம்பர மலையமான் என்பது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் படித்து பண்டிதர் பட்டம் பெற்றார். 1924 முதல் 1940 வரை அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். பள்ளி மாணவர்களுக்குப் பல பாடநூல்கள் எழுதினார்.

இவர் பகுத்தறிவுக் கொள்கை கடைப்பிடித்து வாழ்ந்து வந்தார். இவர் தன் முப்பது வயதுக்குப் பிறகு சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். அதன் பிறகு வேறு சாதியைச் சேர்ந்த பெண்ணான சிவகாமி அம்மாள் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அக்காலத்தில் சாதிக்கலப்புத்திருமணம் செய்ய மிகவும் துணிவு வேண்டும்.


திரு அ. வில்சன், இதழாசிரியர்

**பணிகள் :**

1936ல் 'அறிவுக் கொடி' என்ற பத்திரிகையை அவர் நடத்தினார். அதற்கு சிவகாமி அம்மாவே ஆசிரியராக இருந்து அனைத்து பொறுப்புகளையும் கவனித்து வந்தார். இவர் ஆசிரியர் பணிபுரிந்து கொண்டே சென்னையிலிருந்து வெளிவந்த பத்திரிகைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் எழுதி வந்தார். இவர் 1938ல் சென்னைக்கு வந்தார். சிங்கப்பூரிலிருந்து வரும் தமிழ்ப் பத்திரிகை சிங்கப்பூர் தமிழ் முரசில் தொடர்ந்து பன்னிரெண்டு ஆண்டுகளாகத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். தமிழ்ப் பத்திரிகைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் எழுதி வந்தார். தன் மனைவி சிவகாமி அம்மாவை ஆசிரியராக நியமித்து அறிவுக்கொடி என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.

**நூல்கள்**


அறிவுக்கொடி, பகுத்தறிவு, வெற்றி முரசு, புதுவை முரசு, குடியரசு, தமிழ்நாடு, திராவிட நாடு போன்ற பல பத்திரிகைகளில் சேர்ந்து பணியாற்றி அனுபவம் பெற்ற இவர், பேரறிஞர் அண்ணா ஆசிரியராக இருந்து வந்த விடுதலை பத்திரிகையில் துணை ஆசிரியராக 1940ல் பணியில் சேர்ந்தார். ஓராண்டு பணியாற்றிய பின்னர் கும்பகோணம் சென்று 'முன்னேற்றம் பிரஸ்' எனும் அச்சகம் நடத்தினார். சிறிது காலம் நடத்தி மீண்டும் சென்னைக்கே சென்று 'லோகோபகாரி' பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். 1951 வரைபணியாற்றினார். பின்னர் தனியாக நூல்கள் எழுதி வெளியிடத் தொடங்கினார்.



இவர் சங்ককாலத்து தமிழ் நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்கணக்கு, தொல்காப்பியம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற இலக்கியங்களை நன்கு ஆய்வு செய்து அந்நூல்களை எளிய மக்களும் பாமரர்களும் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் மிகவும் எளிமைப்படுத்திப் பல நூல்களாக எழுதி வெளியிட்டார். அதனால் சங்ககால நூல்களையும் காப்பியங்களையும் தமிழ் மக்கள் பலரும் அறிந்து பயிலும் வண்ணம் தொண்டு செய்தார். பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் வாழ்க்கை வரலாற்றை 'தமிழர் தலைவர்' என்ற நூலாக எழுதி வெளியிட்டுத் தமிழக மக்கள் அறியும் வகையில் வெளியிட்டார்.

**இறப்பு:**

பைந்தமிழ்ச் செல்வர், சீர்திருத்தச் செம்மல் என்று மக்களால் போற்றப்பட்டவரும், ஐம்பது நூல்களுக்கு மேலாக எழுதித் தமிழ்த் தொண்டாற்றியவருமான, சாமி சிதம்பரனார், 17-1-1961 ஆம் நாளில் இயற்கை எய்தினார்.



திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

## முயற்சியின் பாதங்களை
## வணங்கியே தீரும்
## வெற்றியின் சிரம்



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com